Sri Lankan Journal of Arabic and Islamic Studies
ISSN: 2550:3014
Published by: Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka

# இன நல்லுறவு, சமாதானம் என்பவற்றை கட்டியெழுப்புவதில் முஸ்லிம் சமய நிறுவனங்களின் பங்களிப்பு

## (கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் இன நல்லுறவு சமாதானச் செயற்பாடுகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு)

**Mr. Mohamed Thamby Habeebullah**

Lecturer, Department of Arabic Language
Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka
habeebullah@seu.ac.lk.

**ஆய்வுச்சுருக்கம் (Abstract)**

இலங்கை சிங்களம், தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவம் ஆகிய சமூகங்களைக் கொண்டுள்ள ஒரு பன்மைத்துவ நாடாகும். ஒவ்வொரு இனமும் இந்நாட்டில் தொன்மை வரலாற்றினைக் கொண்டு காணப்படுவது அடையாளமிட்டுக் கூறப்பட வேண்டிய சிறப்பம்சமாகும். இலங்கை பல்லின சமூகங்களைக் கொண்ட ஒரு நாடு என்ற ரீதியில் இனங்களிடையே நல்லுறவுகளை பேணிக்காப்பதற்கான செயற்பாடுகள் தொன்மை காலத்திலிருந்தே அது தொடங்கப்பட்டுவிட்டது எனலாம்.

இந்நாட்டில் காணப்படும் சமூகங்களை சமய, சமூக, அரசியல் ரீதியாக வழி நடாத்தக்கூடிய பல நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் சமூகத்தை சமய ரீதியாக வழி நடாத்தக்கூடிய நிறுவனங்கள் அண்மைக் காலமாக இலங்கையில் சகல சமூக மட்டங்களிலும் பெரும் செல்வாக்கு பெற்று வளர்ந்து வருவது அவதானிக்கத்தக்க ஒரு விடயமாகும். பொதுவாக இலங்கை வாழ் சமூகங்களைப் பொருத்தவரையில் அவர்கள் சமய ரீதியான வழி காட்டல்களை மிகவும் அக்கரையோடும் முதன்மைப்படுத்தி நோக்குவதுடன் அதனைப் பின்பற்றி வாழ்வதை புனிதமானதாகவும் மன நிம்மதியை வழங்குவதாகவும் மிகவும் விருப்பத்துக்குறியதாகவும் நோக்குகின்றனர்.

இந்த வகையில் " இலங்கை முஸ்லிம் சமூகத்தை சமய சமூக ரீதியாக வழி நடாத்தக்கூடிய முக்கிய பலம் பொருந்திய நிறுவனங்களில் ஒன்றாகவும் மிக ஆரம்ப காலத்திலேயே தோற்றம் பெற்று சமூகத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற ஒரு மகத்துவ மிக்க உயர் சபையாகவும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா (Supreme council of Muslim Theologians) விளங்குகிறது. இவ்வுயர் சபை இலங்கையில் மாகாண மாவட்ட

மற்றும் பிரதேச ரீதியாக 132 க்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டும் காணப்படுகின்றது."[1]

கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் கீழ் இயங்கும் ஒரு கிளைச் சபையாகும். இவ்வுயர் சபை சுதந்தரத்திற்கு முற்பட்ட காலம் முதல் இன்று வரை பல்வேறு வகையான சமூக, சமய, பொருளாதார மற்றும் அரசியல் முதலிய செயற்பாடுகளில் களமிறங்கி அதீத ஈடுபாடு காட்டி வருவது ஈண்டு குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இலங்கையில் கடந்த காலங்களில் இடம் பெற்ற 30 வருட உள்நாட்டு கோர யுத்தத்தினால் இனங்களிடையே முரண்பாடுகளும் ஒரு சமூகம் மற்ற சமூகத்தை அச்சத்தோடும் பகைமை உணர்வோடும் நோக்கும் நிலையும் காணப்பட்டது. இத்தகையதொரு மனோ நிலையை சமூகங்களிலிருந்து கலைந்து சுமூகமான நிலையையும் சமதானம் மற்றும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்ற தூய்மையான நோக்கத்தில் பல்வேறு மட்டங்களிலுள்ள சமூக, சமய அமைப்புக்கள் இலங்கையில் பல பகுதிகளில் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த வகையில் முஸ்லிம்களின் சமய உயர் சபையான கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா பல்லின சமூகங்களுக்கிடையே இன நல்லுறவு, சமாதானம் என்பவற்றை கட்டியெழுப்புவதில் திருகோணமலை மாவட்டத்திலும் கிழக்கு மாகாண ரீதியிலும் பாரிய பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் இவ்வாய்வானது இவ்வுயர் சபையின் இனநல்லுறவு, சமாதானச் செயற்பாடுகளை அடையாளப்படுத்துவதுடன் மேலும் தற்போதைய சூழலில் குறித்த இவ்விரு எண்ணக்கருக்களை கட்டியெழுப்புவதற்கு இவ்வுயர் சபை எவ்வாறான வலுவூட்டல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்பதற்கான பரிந்துரைகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. ஏனெனில் இனத்தின் பெயரால் வன்முறை சமூகங்களில் தலை விரித்தாடிய போது அவற்றை தீர்ப்பதில் கடந்த காலங்களிலும் தற்போதைய சூழலிலும் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

எனவே இவ்வாய்வு முதலாம் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் ஆகியவற்றை ஆய்வு மூலங்களாகக் கொண்டு பண்புசார் பகுப்பாய்வு முறையில் கொள்ளப்படுகின்றன.

## ஆய்வு அறிமுகம் (Introduction)

இலங்கை பல்லின சமூகங்களைக் கொண்ட ஒரு நாடு என்ற ரீதியில் இனங்களிடையே நல்லுறவுகளை பேணிக்காப்பதற்கான செயற்பாடுகள் தொன்மை காலத்திலிருந்தே அது தொடங்கப்பட்டு விட்டது எனலாம். கி.பி.1505இல் இருந்து மேற்கத்தைய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக நீண்ட காலமாக ஓரே அணியில் ஒற்றுமையாக இருந்து போராடிய சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்கள், சுதந்திரத்தின் பின்னரும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்தனர். அவர்களிடையே முரண்பாடுகள், பிணக்குகள் தோன்றும் போது அப்போது வாழ்ந்த சமூக முன்னோடிகளால் அவை சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்டு சமரசம் ஏற்படுத்தப்பட்டது.

[1].அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கிண்ணியாக் கிளையின் செயற்பாட்டு அறிக்கை, 2013/2014 ஏப்ரல் பக்: 02

இங்கு தோன்றிய முரண்பாடுகளுக்கு மேற்கத்தைய காலனித்துவ சதித் திட்டங்கள் கூட சில போது காரணமாக அமைந்திருந்தது. ''மேற்கத்தைய காலனித்துவம் தமது குடியேற்ற நாடுகளில் படைப்பல ரீதியாக தமது மேலாதிக்கத்தை விலக்கிச் சென்ற போதிலும் அவர்களின் கலாசாரத்தையும் சுரண்டல் உத்தியை நோக்காகக் கொண்ட தந்திரத்தையும் கட்சிதமாக காய் நகர்த்தி வருகின்றனர்.''[2] இந்த வகையில் சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் இனங்களுக்கிடையில் சில சந்தர்ப்பங்களில் முரண்பாடுகள் ஏற்பட்ட போது அவற்றை ஐக்கியப்படுத்தி உடன்பாட்டைக் கொண்டு வருவதில் பல தூய்மையான நோக்கங்களைக் கொண்ட மனிதர்கள் அதில் ஈடுபட்டு ஆரோக்கியமான முன்னெடுப்புகளை மேற்கொண்டனர்.

இலங்கை முஸ்லிம்களிடையே பல சமய நிறுவனங்கள் காணப்படுவதுடன் அவை சமூகத்தின் மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு பலதரப்பட்ட செயற்பாடுகளிலும் களமிறங்கி இயங்கியும் வருகின்றன. இந்நிறுவனங்களில் முன்னணிச் சமய அமைப்பாக ஜம்இய்யத்துல் உலமா விளங்குகிறது. ''இது 1924 ஆம் ஆண்டு இலங்கையில் கொழும்பை தலைமையாகக் கொண்டு மூத்த உலமாக்களால் (இஸ்லாமிய அறிஞர்களால்) ஸ்தாபிக்கப்பட்டதுடன் அதே ஆண்டில் பல இடங்களுக்கு விரிவாக்கமும் செய்யப்பட்டன.''[3] அவற்றுள் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவும் ஒன்றாகும். இலங்கை முஸ்லிம் சமூகத்தை சமய பண்பாட்டு, தேசிய நல்லிணக்கம், சமாதானம் என்பவற்றின் பால் வழிகாட்டி முன்மாதிரியான சமூகமாக உருவாக்கும் வகையில் தோற்றம் பெற்ற அமைப்பே இவ்வுயர் சபையாகும்.

பிராந்திய ரீதியாக உருவாக்கப்பட்ட சபைகளில் திருகோணமலை மாவட்டத்தின் தாய்ச் சபையாக கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா விளங்குவதுடன் இலங்கையில் உள் நாட்டு யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதிகளில் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களுடனும் அரச படையினர் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு என்பவற்றுடன் சமூகப் பிரதிநிதிகளாக மத்தியஸ்தம் வகித்து பேச்சு வார்த்தைகள் மூலம் சமாதானம், நல்லிணக்கம் என்பவற்றை கட்டியெழுப்புவதில் பாரிய பங்கினை வகித்துள்ளது.

கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் கீழ் சமூகத்திலுள்ள துறை சார் முன்னோடிகள் இணைக்கப்பட்டு அவர்களுக்கான செயற்பாடுகள் வரையறை செய்யப்பட்டு சமாதான நல்லிணக்க முன்னெடுப்புக்கள் இச்சபையால் முன்கொண்டு செல்லப்படுகின்றன. இலங்கையில் இனப்பிரச்சினை உக்கிரமடைந்து இனங்களுக்கிடையிலான வன்முறைகள் அதிகரித்திருந்த காலப்பகுதியில் அரசியல்வாதிகள் தமது உயிருக்கு பயந்து எதுவும் பேசாது ஒதுங்கியிருந்த சந்தர்ப்பங்களில் ம்இய்யத்துல் உலமா உறுப்பினர்கள் மிகுந்த

[2]. அப்துல் அஸீஸ் அல் கஹ்லூத் 1987, மேற்காபிரிக்க நாடுகளில் காலனித்துவமும் கிரிஸ்தவமயமாக்கலும் (அறபு) வெளியீடு, தாருல் குத்ப் கெய்ரோ பக்: 17

[3] 1999-2003 கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் சாதனைகள் 17 யூலை 2003, வெளியீடு கிண்ணியா ஜ.உலமா பக் 05

அர்ப்பணிப்பு மற்றும் தியாகத்துடன் செயற்பட்டமை அவசியம் நினைவு கூறப்பட வேண்டியதாகும்.

**ஆய்வுப் பிரச்சினை (Research Problem)**

சமய நிறுவனங்கள் பொதுவாக வரையறுக்கப்பட்ட சில சமயக் கிரிகைகளோடு மாத்திரம் ஈடுபாடுகளை மட்டுப்படுத்திக் கொள்வது என்ற கருத்தியல் மக்களிடையே பரவலாக காணப்பட்ட போதிலும், முஸ்லிம் சமூகத்தில் சமய நிறுவனங்களில் அதிக செல்வாக்கினைப் பெற்றுள்ள கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் இன நல்லுறவு, சமாதானச் செயற்பாடுகளில் அதன் வகிபாகம், சமூகத்தில் அது வகிக்கும் செல்வாக்கு, இனநல்லுறவு, சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சமூகக் களத்தில் அது எதிர் கொள்ளும் சவால்கள் எத்தகையது என்பதை உள்ளடக்கியிருப்பது இந்த ஆய்வின் பிரச்சினையாகும்.

**ஆய்வின் நோக்கம் (Research Objectives)**

இந்த ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

1. சமூக களத்தில் இயங்கு நிலையிலுள்ள முஸ்லிம் சமய நிறுவனங்களின் பங்களிப்புக்களை மதிப்பீடு செய்தல்
2. இனநல்லுறவு, சமாதானம் போன்ற எண்ணக்கருக்களை செயல் வடிவப்படுத்துவதில் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் வகிபாகத்தை வெளிக்கொண்டு வருதல்
3. இனநல்லுறவு, சமாதானம் போன்ற எண்ணக்கருக்களை செயலுருவப்படுத்துவதில் ஜம்இய்யத்துல் உலமா எதிர்நோக்கும் சவால்கள், அவற்றின் செயற்றிறனை மேலும் வலுவூட்டக்கூடிய பரிந்துரைகள் என்பவற்றை முன்வைத்தல்

**ஆய்வு முறையியல் (Research Methodology)**

இவ்வாய்வுக்கு முதல் நிலைத் தரவுகள் (Primary Data) இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய முறைகளை ஆய்வு மூலங்களாக கொண்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

**முதல் நிலைத் தரவுகள் (Primary Data) :** இதில் நேர்காணல் மற்றும் வினாக் கொத்து முறைகள் பயன்படுத்தப்பட்டன. நேர்காணல், வினாக் கொத்து முறைகள் மூலம் ஜம்இய்யத்துல் உலமா சபையின் உறுப்பினர்கள் மற்றும் அதனோடு இணைந்து செயற்பட்ட ஏனைய உபகுழுக்களான மஜ்லிஸ் அஷ்ஷூரா, கிண்ணியா பள்ளிவாயல்கள் ஒன்றியம், பைத்துஸ் ஸகாத், இஸ்லாமிய இயக்கங்கள், சகவாழ்வு அமைப்பு, கிண்ணியா மக்கள் மன்றம், கல்விக்குழு, கலாச்சார மேம்பாட்டுக் குழு ஆகிய நிறுவனங்களின் உறுப்பினர்களிடமிருந்தும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இந்த வகையில் கிண்ணியா பிரதேச ஜம்இய்யத்துல் உலமாவின் 21 நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் அதன் உப குழுக்களில் 30 பேர்களிடமும் கிண்ணியாவில் பிரதேசத்திலுள்ள இரண்டு கோயில்களின்

தர்மகருத்தாக்களில் 10 பேர்களிடமிருந்தும் மாதிரி வினாக் கொத்துக்கள் வழங்கப்பட்டு குறித்த தமைப்புக்களை மையப்படுத்திய தரவுகள் சேகரிக்கப்பட்டன.

மேலும் ஆய்வுப் பிரதேசத்தில் இருந்து 50 நலன்விரும்பிகள் கிண்ணியாவின் நகர மற்றும் பிரதேச சபைகளுக்குட்பட்ட 10 பள்ளிவாயல்களின் இமாம்கள் கிண்ணியாப் பிரதேச செயலகத்தில் கடமை புரியும் சமூக ஈடுபாடுகளில் அதிக ஆர்வம் கொண்டோர்களில் 15 பேர்களிடமும் ஒழுங்கமைக்கப்பட்ட குழு முறை நேர்காணல்களும் தனித்தனி தரப்பாரிடையே நடாத்தப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இரண்டாம் நிலைத் தரவுகளுக்காக (Secodary Data) கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் நல்லிணக்கச் செயற்பாடுகளுடன் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், செய்திமடல்கள், பத்திரிகைகள், கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் இணையத்தளம் என்பன பயன்படுத்தப்பட்டன. மேற்படி இவ்வுயர் சபை தொடர்பான மூலங்களிலிருந்து திரட்டப்பட்ட தகவல்கள் பண்புசார் பகுப்பாய்வுக்கு (Qualitative Descriptive Analysis) உட்படுத்தப்பட்டதுடன் விமர்சன ரீதியிலமைந்த ஆய்வாக முன்வைக்கப்படுகிறது.

### முன்னைய ஆய்வுகள் (Literary Review)

இத்தலைப்புடன் தொடர்பான நேரடியான நூல்கள் பெரியளவு காணப்படாத போதிலும் ஆங்காங்கே எழுதப்பட்டுள்ள சிறிய நூல்கள் மற்றும் கட்டுரைகள், செய்தி மடல்கள், வரலாறு தொடர்பான திரட்டுகள் பதிப்புச் செய்யும் போது எழுதப்பட்டுள்ள தரவுகளும் இவ்வாய்வில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடப்தக்கதாகும்.

இந்த வகையில் கிண்ணியா மாணவர் பேரவையினால் 2006 இல் வெளியிடப்பட்ட “ கிண்ணியா” எனும் நூலில் கிண்ணியாவின் கல்வி நிலை மற்றும் வரலாறு பற்றி எழுதப்ட்டுள்ள கட்டுரையில் சமயக் கல்வியின் முன்னோடிகள் தொடர்பாகவும் சமய நிறுவனங்களின் கல்விப் பணிகள் தொடர்பாகவும் எழுதப்பட்டுள்ள கட்டுரையில் ஜம்இய்யத்துல் உலமாவின் பணிகள் பற்றியும் சிறியளவு விளக்கப்பட்டுள்ளது. மேலும் குரல் பதிப்பகத்தின் ஆசிரியரும் பத்திரிகைளாயரும் உதவித் திட்டமிடல் பணிப்பாளருமான ஏ.சி.எம். முஸ்இல் 2014 இல் எழுதிய“ கிண்ணியாவின் முன்னோடிகள்” என்ற நூலிலும் முஸ்லிம் சமய அறிஞர்களான பேராசிரியர் கே.எம். காலிதீன், பெரிய தமீம் ஆலிம்ஷா பற்றி குறிப்பிடும் ஆக்கங்களில் ஜம்இய்யத்துல் உலமாவின் செயற்பாடுகள் பற்றியும் ஓரளவு குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மௌலவி எம்.ரீ.ஹபீபுல்லாஹ் 2012 இல் எழுதிய “கிண்ணியாவின் த.ஃவா முன்னோடி பெரியாலிம்ஷா “ என்ற நீண்ட கட்டுரை “மீள்பார்வை” பத்திரிகையிலும் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் ஸ்தாபகம் அதன் பங்களிப்புக்கள் அதன் முன்னோடி என்ற வகையில் பெரியாலிம்ஷாவின் பணிகள் என்பன தொடர்பாகவும் ஓரளவு விரிவாக எழுதப்பட்டுள்ளது.

மேலும் 2007- 2008இல் கிண்ணியா பிரதேச செயலகம், கிண்ணியா நகர சபை மற்றும் பிரதேச சபை ஆகிய அரச நிறுவனங்கள் இணைந்து GTZ நிறுவனத்தின் அனுசரணையோடு வெளியிட்ட “ Socio Economic Profile of Kinniya” என்ற ஆவண நூலிலும் சமய நிறுவனங்கள் என்ற ரீதியில் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் பணிகள் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது. 2005 ஆம்

கிண்ணியா பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்ட எழுதப்பட்ட ''சுனாமி'' என்ற நூலில் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் முன்னால் செயலாளர் எம்.வை.எம். ஹதியல்லாஹ்வினால் எழுதப்பட்ட ''கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் சுனாமியின் போதான மனித நேயப்பணிகள்'' என்ற கட்டுரையில் அதன் பணிகளையும் இன நல்லுறவுச் செயற்பாடுகளையும் விரிவாக விளக்கியுள்ளார். மேலும் கிண்ணிய ஜம்இய்யத்துல் உலமா தொடர்பாகவும் அதன் இன நல்லிணக்க செயற்பாடுகள் பற்றியும் 2004இல் எழுதி வெளியிடப்பட்ட'' ஜம்இய்யாவின் செயற்பாட்டறிக்கை'' என்ற தலைப்பிலான சிறிய நூலும் முக்கியத்துவம் பெறுகிறது. இதில் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் செயற்பாடுகள், சமய சமூக நல்லிணக்கப்பணிகள் என்பன தொடர்பாகவும் அது எதிர்நோக்கிய சவால்கள் என்பன பற்றியும் விளக்குகிறது.

பொதுவாக மேற்குறித்த ஆக்கங்கள் யாவும் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் செயற்பாடுகள் சமய நல்லிணக்கப் பணிகள் தொடர்பாக முன்வைத்த போதிலும் ஜம்இய்யாவின் சமய நல்லிணக்க மற்றும் சமாதானச் செயற்பாடுகள் பற்றிய முழுமையான ஆவணத் தொகுப்புகள் நேரடியாக எழுதப்படவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

## கலந்துரையாடலும் கண்டுபிடிப்புக்களும் (Discussion and Results)

### 1. இனநல்லுறவு, சமாதானம் என்பவற்றின் அவசியமும் சமய நிறுவனங்களின் பங்களிப்பும்:

பன்மைத்துவ சமூக அமைப்பில் இனநல்லுறவு சமாதானம் என்ற எண்ணக்கருக்களை மக்களிடையே பரப்புவதும் அதனை ஸ்தீரப்படுத்துவதற்கான சகல முன்னெடுப்புக்களையும் மேற்கொள்வதும் சமகாலத்தில் இன்றிமையாத தேவைகளாகும். பல்லின சமூகக் குழுமங்கள் வாழும் இலங்கை போன்ற ஒரு நாட்டில் இத்தகைய நல்லிணக்கச் செயற்பாடுகளின் தேவை இன்றியமைாத ஒன்றாக காணப்படுகிறது. இங்கு வாழும் முஸ்லிம்கள் இஸ்லாத்தை பின்பற்றி வாழ்வதற்கான அனைத்து வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ள இத்தைய ஒரு சூழலில் இனங்களிடையே நல்லுறவைப் பேணி இஸ்லாத்தை பொதுமைப்படுத்திய முதன்மை நிலை மார்க்கமாக அறிமுகப்படுத்த வேண்டிய பொறுப்பு அவர்களின் கைகளிலேயே விடப்பட்டுள்ளன. இவற்றுக்கான வழிகாட்டல்களும் முன்மாதிரிகளும் அல்குர்ஆன் சுன்னா ஆகிய முதன்மை மூலாதாரங்களிலிருந்து பெறுவதற்கான வாய்ப்பும் முஸ்லிம்களுக்குள்ளன. இத்தகைய பாரிய பணிகளை முன்னெடுக்கும் வகையிலான பல்வேறு சமூக சமய அமைப்புகளும் இஸ்லாமிய சீர்திருத்த இயக்கங்களும் போதுமான மனித வளம் மற்றும் பௌதீக வளங்களுடன் காணப்படுகின்றன. இத்தகைய சமூகப் பொறுப்புக்களை முன்னெடுக்கும் சமூகப்பணிகள் முஸ்லிம் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படுவது மிக முக்கிய கடமையாகவுள்ளது.

30 வருடங்களுக்கு மேலால் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் இங்கு வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூங்களிடையே புரிந்துணர்யின்மையையும் இன நல்லுறவில் தூர இடைவெளியையும் விரிசலையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.'' நாகரீகங்களுக்கிடையிலான மோதல், ஒவ்வொரு இனத்தவரும் மற்ற இனம் பற்றிய பிழையான புரிதல் என்பன சமூகங்ளுக்கிடையேயான நீண்ட இடைவெளியை

தோற்றுவித்துள்ளது. இதற்கான முறையான தீர்வினை (Formal solution) அடைய ஆரோக்கியமான கலந்துரையாடல், சரியான புரிதலை உண்டாக்கும் வழிகள் என்பவற்றின் மூலமே ஏற்படுத்த முடியும். சமய சமூக அமைப்புக்கள் இத்தகைய செயன்முறையை நோக்கிய நகர்வில் பங்கேற்புச் செய்வதுடன் மக்களையும் அதன்பால் தூண்ட வேண்டும்.''[4]

இலங்கையில் இவ்வெண்ணக்கருத்தினை சகல மக்களிடமும் கொண்டு செல்ல பல்வேறு சமூக அமைப்புக்கள் தொழிற்பட்ட போதிலும் காத்திரமானதும் இதய சுத்தியுடனுமான முன்னெடுப்புக்கள் சமய அமைப்புக்கள் மூலமே மேற்கொள்ளப்படுகின்றன என்பது குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இந்த வகையில் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா இக்கருத்தியலை விருத்தி செய்வதில் குறிப்பிடத்தக்க காட்டமான பங்களிப்பினைச் செய்து வருகின்றது. இதன் மூலம் இனங்களிடையே நல்லிணக்கமும் சமாதானமும் வளர காரணமாக அமைந்தது எனக்குறிப்பிடலாம்.

இலங்கை போன்ற பல்லின சமூகங்கள் வாழும் நாட்டிலும் இனநல்லுறவையும் சமய நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப முஸ்லிம் தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படும் சமூகப் பணிகள் பெரும் மாற்றத்திற்கான உறுதுணயாக அமையும் என்பது திண்ணம். முஸ்லிம்களிடமுள்ள சமூக தொண்டு நிறுவனங்கள் சமய சமூக அமைப்புக்கள் என்பன இனநல்லுறவை மேம்படுத்தும் வகையிலான பல்வேறு பணிகளை பல்வேறு மட்டங்களில் மேற்கொண்டு வருகின்ற போதிலும் அந்நிறுவனங்களின் பணிகள் அனைத்து இனங்களையும் சென்றடையும் நிலை மந்தகெதியில் காணப்பட்ட போதிலும் அவை அனைவரையும் உள்ளீர்த்த மட்டத்திலான சமூகத் திட்டங்களாக முன்னெடுக்கப்படுவது காலத்தின் இன்றைய முக்கிய தேவையாகவுள்ளது.

## 2. இன நல்லுறவு சமாதானம் என்பவற்றை வலுப்படுத்துவதில் கிண்ணணியா ஜம்இய்யத்துல் உலமாவின் பங்கு

கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா ( The supreme Council of Muslim Theologians of Kinniya ) சமூக அமைப்பில் பழமை வாய்ந்த ஒரு மார்க்க சபையாகும். " இவ்வமைப்பு தேசிய ரீதியாக 1924ஆம் ஆண்டு கொழும்பில் ஸ்தாபிக்கப்பட்டு அதன் கிளைகள் இலங்கையின் 132 இடங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டு இன்று வரை சிறப்பாக இயங்கி வருகின்ற ஒரு உயர்ந்த ஒரு சபையாகும்''[5].

இச்சபையானது ஆரம்ப காலப்பகுதியில் ''மஜ்மஉல் உலமா'' எனும் பெயரில் கிண்ணியாப் பிரதேசத்தை பிரதான தளமாக கொண்டு திருகோணமலை மாவட்டத்தில் இச்சபை பிரபல்யம் பெற்று விளங்கியது. மக்களுக்கான சமய வழிகாட்டல்களை பிரதானமாக வழங்கி வந்ததுடன் பல்லின மக்கள் மத்தியிலே சகவாழ்வு, சமாதானம், இன ஒற்றுமை,

1. ஹஸன் அலி நத்வி :1977 அஸ்ஸராஹ் கைனரதில் இஸ்லாமிய்யா வல்பிக்ரதில் கர்பிய்யா தாருல் பஸீர், கெய்ரோ பக்: 66

[5] . www.acju.net

சமய விழுமியங்கள் ஸ்தீரப்படுத்துதல் என்பவற்றின் பால் சமூகத்திற்கு முழுமையான வழிகாட்டுதலையும் வழங்கி முன்னேற்றகரமான பணிகளில் தம்மை ஈடுபடுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். ‘‘கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் முன்னோடியாக திகழும் முஹம்மது ஸாலிஹ் ஆலிம் (பெரியாலிம்ஷா) கிண்ணியாவில் ஸ.ஃ.திய்யா அறபுக் கல்லூரி எனும் அறபு இஸ்லாமிய கலாபீடத்தைத் 1895 இல் நிறுவி மக்களுக்கு சமய, சமூக ரீதியாக வழிகாட்டி வந்ததுடன் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் தலைமைக் காரியாலயத்தையும் இக்கலாபீடத்தில் அமைத்துக் கொண்டு சமூகத்திற்கான வழிகாட்டலையும் நெறிப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தார். அப்போது வடக்கு கிழக்கு பிராந்தியங்களில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் மார்க்க விளக்கங்களையும் பத்வாக்களையும் கிண்ணியாவில் இயங்கி வந்த ‘‘மஜ்மஉல் உலமா’’ அமைப்பிடமும் அதனை இயக்கிக் கொண்டிருந்த பெரியாலிம்ஷா மற்றும் அவருடன் இணைந்து செயலாற்றிய முஸ்லிம் அறிஞர்களிடமிருந்தே பெற்று வந்தனர்.[6]

இச்சபை ஆரம்ப காலம் முதல் இன்று வரை முஸ்லிம் சமூகக் கட்டமைப்பைப் பேணுவதிலும் பல்லின சமூகங்களிடையே ஒற்றுமையை வலுவூட்டுவதிலும் பாரிய பங்களிப்பினை செய்து வருகிறது. இந்த வகையில் கிண்ணியா மட்டுமன்றி திருகோணமலை மாவட்ட முஸ்லிம் சமூக அமைப்புகளின் தலைமையாக விளங்கும் இவ்வுயர் சபையானது இனப்பிரச்சினை வலுவடைந்திருந்த காலப்பகுதியலும் சுனாமிப் பேரலை ஏற்பட்ட காலங்களிலும் இலங்கையின் கோரப் போருக்குப் பின்னரான தசாப்தங்களிலும் சமூகக் கட்டமைப்பைப் பாதுகாக்க பல காத்திரமான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சமூகத்தில் எத்தகைய பிரச்சினைகள் வருகின்ற போதும் மக்கள் முதலில் நாடி வந்து தமது பிரச்சினைகளை முறையிட்டு தீர்வுகளையும் ஆலோசனைகளையும் பெறுமிடமாக இச்சபை இன்று வரை காணப்படுகிறது. இவ்வுயர் சபை கிண்ணியாவலுள்ள அனைத்த புத்தி ஜீவிகளையும் ஒன்றிணைத்து மஜ்லிஷ் அஷ்ஷூறா, சகவாழ்வு அமைப்பு மற்றும் ஏனைய 09 உபகுழுக்களை உருவாக்கி சமூக இன நல்லுறவு மேம்பாட்டு நடவடிக்கையில் அபரியாக களமிறங்கி தனது செயற்றிட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது.

குறிப்பாக தமிழ், முஸ்லிம் இனங்கள் வாழும் கிண்ணியா பிரதேசத்தில் தமிழ் புலிப் பயங்கரவாதிகளின் அடாவடித்தனங்களினால் இனமுறுகல், மோதல் நடவடிக்கைகள் ஏற்பட்ட போது கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் காத்திரமான நடவடிக்கையினால் அவை தணிக்கப்பட்டன. கிண்ணியாவை அண்மித்த மூதூர், தோப்பூர், குச்சவெளி, நிலாவெளி, கந்தளாய், தம்பலாகமம் போன்ற பிரதேசங்களுக்கும் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா தனது நல்லிணக்கப்பணிகளை நகர்த்திச் சென்று இனங்களிடையே முரண்பாடுகளை களைந்து அவற்றுக்கிடையே சமாதானம், நல்லிணகத்தை ஏற்படுத்துவதில் செயற்பட்டு வந்தமை சந்தேஷமாக குறிப்பிடப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

[6]. நத்வதுல் புகாரி 2008 சிறப்பு மலர் , நத்வதுல் புகாரி அருபுக் கல்லூரி வெளியீடு கிண்ணியா பக் 42

யுத்த காலப்பகுதிகளில் ஆலங்கேணி, குரங்கு பாஞ்சான், மாவிலாறு ஆகிய கிண்ணியாவுக்குட்பட்ட பிரதேசங்களில் அடிக்கடி இனமுறுகல்கள் ஏற்பட்டன. விடுதலைப் புலிகள் முஸ்லிம்களின் சொத்துக்களை சேதப்படுத்தியும் சாதாரண மக்களிடம் கனமான வரிப் பழுவினை சுமத்தியும் மக்களை கடுமையாக கஷ்டப்படுத்தினர். அத்தகையதொரு சூழலில் சமூகப் பிரதிநிதிகளாக அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களோ, ஏனைய அரசியல் வாதிகளோ சமூக மட்டத்திலுள்ள புத்தி ஜீவிகளோ தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தகைய அடாவடித்தனங்களை வெளிப்படையாக பேசவோ எழுதவோ முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது. சமூகம், சமூகத்திலுள்ள இளைஞர்கள் இத்தகைய அராஜகங்களை தட்டிக் கேட்க கிளந்தெழுந்து பாரிய எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட முற்பட்டு அதன் எதிர் விளைவு பாரியதாக உருவெடுக்க ஆரம்பித்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா தனது சாணக்கியமான அணுகுமறையின் மூலம் அவர்களை அமைதிப்படுத்தி சமூகமான நிலைக்குக் கொண்டு வந்ததுடன் சமூகத்திலுள்ள முக்கிய பிரமுவர்களுடன் இணைந்து இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதில் களமிறங்கி குறித்த தரப்பினருடன் பேச்சு வார்த்தகைளில் ஈடுபட்டு வெற்றியும் கண்டன.

‘‘திருகொணமலை மாவட்டத்திலுள்ள சமூகங்களுக்கு மத்தியில் மத நல்லிணக்கம், சமாதானம், சகவாழ்வு என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்காக கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவுடன் இணைந்து சர்வ மதக் குழுக்களும் சமூக அமைப்புககளும் வினைத்திறனுடன் செயலாற்றின. இந்நிகழ்ச்சித் திட்டத்தில் முஸ்லிம், தமிழ், சிங்களம், கிரிஸ்தவ மதத் தலைவர்கள் மற்றும் சமூகப் பிரதிநிதிகள் பங்கேற்புச் செய்து இனங்களிடையே சுமூகமான நிலையை உருவாக்குவதிலும் சமாதானத்தை ஏற்படுத்துவதிலும் கடுமையாகவும் தியாகத்துடனும் உழைத்தனர்.’’[7]

எனினும் 2001 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் முஸ்லிம், தமிழ் உறவுகளில் பெரும் பாதிப்பு ஏற்பட்டதுடன் இரு சாராரும் பல இழப்புக்களையும் சந்திக்க வேண்டிய நிலை உருவாகியது. இந்த வகையில் ’’ 2003-11-23 ஆம் திகதி விவசாய நடவடிக்கைகளுக்ககாக தமது சொந்த இடமான கிண்ணயாவிலுள்ள நடுவூற்றுக் கிராமத்திற்கு சென்றிருந்த மூன்று முஸ்லிம் விவசாயிகள் தமிழ் புலிப் பயங்கர வாதிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.’’[8] அப்பாவியான சாதாரண மக்கள் மூவரை கொலை செய்ததால் பிரதேச மக்கள் புலிப் பயங்கர வாதிகளின் மீது கடுமையாக ஆத்திமடைந்னர். இவற்றுக்கு பழி தீர்க்கும் வகையில் கிண்ணியாவிலுள்ள முஸ்லிம்களில் சிலர் எதிர் நடவடிக்கையில் இறங்கி தமிழ் மக்களை தாக்கும் செயற்பாடுகளில் இறங்க முற்பட்ட போது கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா களத்தில் இறங்கி இவ்விடயத்தில் தயைிட்டதுடன் ஏற்படவிருந்த மிகப் பெரிய இனமோதல் இதன் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டன.

---

7. 1999-2003 கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் சாதனைகள் 17 யூலை 2003, வெளியீடு கிண்ணயா ஜ.உலமா பக் 17

8. மீள்பார்வை :2004 ஜனவரி இதழ் 90, பக் 11

இதே போன்று ''கிண்ணியாவிலுள்ள பைசல் நகர் கிராமத்தில் தமிழ் புலிப் பயங்கரவாதிகள் 2003-11-23 இல் முஸ்லிம் வீடுகள் சிலவற்றில் மீது கைக்குண்டுகள் வீசி தாக்குதல்களை மேற்க் கொண்டனர். இதில் ஒருவர் கொலை செய்யப்பட்டார்.''[9] இதனால் ஆத்திரம் அடைந்த இளைஞர்களில் சிலர் தமிழ் கிராமமான ஆலங்கேணியில் பதில் பழி தீர்க்கும் நடவடிக்கையில் எத்தனித்திருந்த போது ஜம்இய்யத்துல் உலமாவின் தலையீட்டால் இன மோதல் தவிர்க்கப்பட்டன. அப்போது ஆலங்கேணி கோயில் தர்ம கருத்தாக்களும் மிகுந்த ஒத்துழைப்பு வழங்கி முரண்பாடுகளை களைவதில் ஒத்துழைப்பு வழங்கினர். இவ்வாறே கிண்ணியா பகுதியிலிருந்து ஆலங்கேணி ஊடாக பயணம் செய்த இளைஞனின் மீது LTTE இனர் தாக்குதல்களை மேற்கொண்ட போது அதற்கு பழிவாங்கும் நோக்கில் கிண்ணியா இளைஞர்களும் திரண்டெழுந்த போது ஜம்இய்யத்துல் உலமாவினால் சமாதான முறையில் நிலைமை சுமூகமாக தீர்க்கப்பட்டன.

கிண்ணியாவின் மகமார் ஜூம்ஆப் பள்ளி நிருவாகத்தினர் 2003-10-05 இல் பட்டியனூர் எனும் கிராமத்தில் வைத்து LTTE இனரால் கடுமையாக தாக்கப்பட்ட போது இது தழிழ் முஸ்லிம் இனக்கலவரமாக வெடிக்க ஆரம்பித்தபோது ஜம்இய்யத்துல் உலமா மற்றும் கோயில் தர்ம கர்த்தாக்கள் சேர்ந்து சமாதான முறையில் இப்பதற்ற நிலை முடிவுக்கு கொண்டு வந்தனர்.

''கிண்ணியா பிரதேச முஸ்லிம்கள் விவசாய மற்றும் விறகு தொழில் தேவைகள் நிமித்தம் குரங்குபாஞ்சான் பிரதேசத்திற்கு சாதாரண ஏழைகளில் பத்துப் பேர்கள் 2002/11/17 ஆம் திகதி சென்ற போது LTTE இனரால் 10 வண்டில்கள் மாடுகளுடன் கடத்தப்பட்டனர்.''[10] இந்நிலை பாரதூரமாகி இனமுரண்பாடாக மாறும் நிலை ஏற்பட்டபேது ஜம்இய்யத்துல் உலமாவின் தலைமையில் புலிகளின் மாவட்ட பொறுப்பாளராக அப்போதிருந்த எழிலனுடன் மேற்க் கொண்ட பேச்சவார்த்தையைத் தொடர்ந்து சமூகமான நிலை தோன்றியது.

மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக குடிசைகளை அமைக்க மரங்கள் தரிப்பதற்கு சென்ற போது அதனை விரும்பாத புலிகளுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே தகராறு ஏற்பட்டது. '' இது விடயமாக பேசுவதற்காக LTTE இனர் ஜம்இய்யத்துல் உலமாவிற்கு அழைப்பு விடுத்திருந்தனர். சமாதான காலப்பகுதியாக இருந்ததால் இந்த அழைப்புக்கு சம்மதம் தெரிவித்து புலிகளின் தலைமையகம் சம்பூருக்கு 2005 ஆம் ஆண்டு சென்று அப்போது விசேட பயணத்தை மேற்க்கொண்டிருந்த புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.பா.தமிழ்செல்னைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடாத்தியதைத் தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரின் (TRO) உதவியின் மூலம் தற்காலிக கொட்டில்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.''[11]

இவ்வாறு ஜம்இய்யத்துல் உலமா கிண்ணியாப் பிரதேசம் மாத்திரமின்றி திருமலை மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களையும் உள்ளிட்ட வகையில் இன நல்லுறவை மேற்

[9]. மேலது பக்: 11
[10]. மீள்பார்வை 2002 டிசம்பர் பக் 01
[11]. வீரகேசரி பெப்ரவரி 2005

கொள்வதில் பாரிய பங்களிப்பினை ஆற்றி வந்துள்ளது. “யுத்த காலங்களில் கிண்ணியா ஜம்இய்யத்தல் உலமாவின் இனநல்லுறவு நடவடிக்கைகளை கலாநிதி ஆரியரத்ன, கலாநிதி குமார் ரூபசிங்க, திரு. அஜித் ரூபசிங்க ஆகியோரும் பாராட்டியுள்ளனர். இனநல்லுறவுச் செயற்றிட்டங்களை (Reconcialtion Projects) கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா மற்றும் சர்வ மத குழுவின் ஊடாக மேற்கொள்வதையே அவர்கள் விரும்பினார்கள். இத்தகைய பாராட்டு வாசகங்களை ஜம்இயயாவின் பதிவேட்டுப் புத்தகத்தில் காணலாம்.”[12]

இனப்பிரச்சினை இலங்கையில் இடம் பெற்ற காலப்பகுதியில் நல்லிணக்கச் செயற்பாடுகளில் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா ஈடுபட்டதைப் போன்று யுத்தம் இல்லாத காலப்பகுதிகளிலும் ஈடுபட்டு வந்திருக்கிறது. இலங்கையில் தனியான இருவருக்கிடையில் தோன்றும் தனிப்பட்ட பிரச்சினைகள் சில போது பொதுப் பிரச்சினையாக உருவெடுப்பதுண்டு. கிண்ணயாப் பிரதேசத்தில் இவ்வாறான பிரச்சினைகள் உருவெடுக்கின்ற போதெல்லாம் அவற்றை ஜம்இய்யத்துல் உலமா தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து சுமூகமாக தீர்த்து பொறுத்தமான தீர்வினையும் பெற்றுக் கொடுத்தது. இவ்வாறே பல்லின சமூகங்களிடையே இன உறவை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் குடும்ப ரீதியாக தோன்றும் பிணக்குகள், சமூக ரீதியாக உருவாகும் பிரச்சினைகள், பொருளாதார, சமய, அரசியல், கல்வி, கலாச்சாரம் போன்ற பல்வேறு உறவுகளின் போது தோன்றும் பல்வேறு பிரச்சினைகள் என்பவற்றை சுமூகமாக ஜம்இய்யாவினால் தீர்த்து வைக்கப்பட்டது. பிரச்சினைகளை களத்திற்குச் சென்று நேரடியாகக் கலந்துரையாடி பல சாதகமான அடைவுகளை கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா எய்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வகையில் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவின் நல்லிணக்கச் செயற்பாடுகள் தொடர்பான வினாக் கொத்து தெரிவு செய்யப்பட்ட தரப்பாரிடம் வழங்கப்பட்டு பெற்ற பெறுபேறுகளின் படி 83% மானவர்கள் ஜம்இய்யத்துல் உலமாவின் சமூக மத நல்லிணக்க செயற்பாடுகளை மிக திருப்திகரமானது எனவும் 11% வீதமானோர் திருப்திகரமானது எனவும் 3% வீதமானோர் ஓரளவு திருப்தி எனவும் ஏனைய 3% வீதமானோர் திருப்பயில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவில் நீணட காலமாக செயலாளராகவும் ஜம்இய்யாவின் நல்லிணக்க சமாதான செயற்பாடுகளில் அதிகமாக ஈடுபட்டு வந்த மௌலவி எம்.வை.ஹதியத்துல்லாஹ் இனநல்லுறவு சமாதான நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு காட்டி உழைத்தமைக்காக “சாமஸ்ரீ சமூக ஜோதி “ எனும் கௌரவப்பட்டத்தை 2008 இல் அகில இன நல்லுறவு ஒன்றியம் எனும் அமைப்பு அவருக்கு வழங்கி கௌரவித்தது. சமூகத்கில் காணப்படும் ஊழல் மோசடி என்பவற்றிற்கு எதிராக செயற்பட்டதனால் இவருக்கு “ தேசிய நேர்மைத்திறன் வெற்றியாளர்” எனும் பட்டமும் Transference International Sri Lanka” எனும் அமைப்பால் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இவ்வாறு ஜம்இய்யத்துல் உலமாவும் அதன் அங்கத்தவர்களும் யுத்த காலங்களிலும் அதற்குப்

[12] கிண்ணியா ஜமஇய்யத்துல் உலமா பதிவேடு 17 பெப்ரவரி 2003, கலாநிதி குமார் ரூபசிங்க குறிப்பு

பின்னரும் சமூக மேம்பாடு இனநல்லுறவு சமாதானம் என்பவற்றை மேம்படுத்துவதில் ஈடுபட்டு வந்துள்ளமை குறிப்பிடதடதக்கதாகும்.

## 3. இன நல்லுறவு சமாதானம் என்பவற்றை ஏற்படுத்துவதில் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா எதிர்கொள்ளும் சவால்கள்

கடந்த காலங்களிலும் தற்போதைய சூழலிலும் சமாதான மற்றும் நல்லிணக்க ரீதியான பல காத்திரமான முன்னெடுப்புக்களை கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா மேற்கொண்ட போதிலும் அது சவால்கள் பலவற்றை எதிர்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். சமூக, சமய நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிறுவனம் என்ற ரீதியிலும் களத்திலிருந்து செயற்படுகின்ற அமைப்பு என்ற வகையிலும் நடைமுறை ரீதியாக பல இடர்பாடுகளையும் சவால்களையும் சந்தித்து வருகிறது. இத்தகைய சவால்களை நாம் பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

1. அரசியல் ரீதியான தலையீடு
2. ஆளணிப்பற்றாக்குறை நிலவுகின்றமை
3. பொருளாதார ரீதியன நெருக்கடி
4. கலாசார ரீதியான சவால்கள்
5. சமூக ரீதியான சவால்கள்
6. பௌதீக வளக் குறைபாடு
7. இனவாதப்போக்கு கொண்டவர்களின் காழ்ப்புணர்வு

கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா எதிர்காலத்தில் இச்சவால்களை வெற்றி கொண்டு தனது சமாதான நல்லிணக்க செயற்பாடுகளை முன்கொண்டு செல்ல பின்வரும் நடவடிக்கைகள் பரிந்துரைகளாக முன்வைக்கலாம்.

1. சமாதானம் நல்லிணக்கம் தொடர்பான இஸ்லாமிய போதனைகளை தெளிவாக விளங்கக் கொண்டு செயல்படல்

2. சகலதுறைகளிலும் நிபுணத்துவம் உள்ளவர்களை உள்வாங்கி இவ்வெண்ணக்கருக்களை விருத்தி செய்தல்

3. நல்லிணக்கம் சமாதான நடவடிக்கைகளுக்கு குந்தகத்தை ஏற்படுத்தாத விதத்தில் நடந்து கொள்ளும் அரசியல் வாதிகளின் கருத்துக்களையும் உள்வாங்கல்

4. பொருளாதார ரீதியாக ஓரளவு தம்மை ஒழுங்குபடுத்திக் கொள்ளல்

5. சமூகத்தில் சமாதானம் நல்லிணக்கம் தொடர்பான கருத்துக்களை மக்களிடம் பரப்புதல்

6. பல்லின சமூகத் தலைவர்களுடன் இவ்வெண்ணக்கருக்கள் தொடர்பான கலந்துரையாடல்களை அடிக்கடி மேற்கொள்ளுதல்

7. சமூக மத நல்லிணக்க சிந்தனைகளை மக்கள் மயப்பட்டதாக மாற்ற ஊடகங்களை அதிகமாக பயன்படுத்துதல்

## முடிவுரை (Conclusion/Implication)

மக்களிடையே நல்லிணக்கம், சமாதானம் என்ற எண்ணக்கருக்களை உருவாக்குவதில் சமய நிறுவனங்களில் இலங்கையில் முக்கிய இடத்தை வகிக்கின்ற ஒன்றாக கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா விளங்குகிறது. யுத்த காலங்களிலும் அதற்கு பிற்பட்ட காலப்பகுதிகளிலும் அதன் பங்களிப்பு மகத்தானதாகும். இனமுரண்பாடுகள் , வன்முறைகள் மிகைத்திருந்த காலப்பகுதிகளில் அவற்றைக் களைந்து சுமூகமான நிலையை இனங்களிடையே ஏற்படுத்துவதில் இந்நறுவனம் பங்களிப்புச் செய்துள்ளன.

சமூகங்களிடையே உறுதியான சமாதானம் நல்லிணக்கம் உருவாக சமய நிறுவனங்களின் பின்னணி இன்றியமையாதது என்பதை கிண்ணியா ஜம்இய்யத்துல உலமாவின் கடந்த கால செயற்பாடுகளில் இருந்து நாம் அறியலாம்.

## உசாத்துணை பட்டியல் ( References )

1. ஹபீபல்லாஹ் எம்.ரீ 2008 : இனப்பிரச்சினையும் கிண்ணியா முஸ்லிம்களும், கிண்ணியா பேப்பர் பொய்ன்ட் அச்சகம்.

2. சஞ்சிகைக் குழு 2013 ‘‘அல் அக்ஸா’’ வெளியீடு : கிண்ணியா அல் அக்ஸா மகா வித்தியாலயம் 2013இ அல் அக்ஸாப் பாடசாலையின் 85வது வருட நினைவு மலர்.

3. சஞ்சிகைக் குழு, 2010, ‘‘ ஸகாத் பயணத்தின் சுவடுகள்’’ வெளியீடு: கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமா 2010: ஸகாத் பிரிவு.

4. சஞ்சிகைக் குழு, 2006 ‘‘சுனாமி ‘‘ வெளியீடு: கிண்ணியா பிரதேச செயலகம் சுனாமி ஒரு வருட நினைவு மலர்.

5. Kinniya planning Task Force, 2007: Kinniya Socio-Economic Profile, published by Kinniya Divisional Secretariate.

6. Muslim students Assembly 2004: Kinniya , CTI Computer Systems

7. Habeebullah, M.T. 2001, Role of Arabic colleges in sreading the Arabic languages Trincomalee Arabic Colleges as a model.research submitted to Department of Arabic and Islamic Civilization, Not published.

8. Satheek, AJ.M.2001, Tricomalee Muslims and their culture, research submitted to Department of Arabic and Islamic Civilization. Not published.

9. முஸ்இல் ஏ.சீ.எம். 2016, கிண்ணியாவின் முன்னோடிகள், வெளியீடு: குரள் பதிப்பகம், கிண்ணியா
10. கிண்ணியா, வெளியீடு: கிண்ணியா மாணவர் பேரவை 2006
11. முத்தலிப் எஸ்.ஏ. 2013 “ கிண்ணியாவில் மறைந்து போன கலாச்சாரப் சுவடுகள்” வெளியீடு குரள் பதிப்பகம், கிண்ணியா.
12. சரவணபவன், 2003, வரலாற்றுத் திருகோணமலை திருகோணமலை வெளியிட்டாளர்.
13. Vasundhara Mohan, 1987, Identity Crisis of Sri Lankan Muslims, Mittal Publication,Delhi.
14. வீர கேசரி
15. தினகரன்
16. மீள்பார்வை
17. முஸ்லிம் குரள்

**18. நேர்காணல்கள்:**

1. சக வாழ்வுக்குழு உறுபடபினர்கள்: காலம் மஜ்லிஸ் ஸூரா 2013-11-05
2. மஜ்லிஸ் ஸூரா காலம 2013-11-05
3. ஆசிரியர் சங்கம், பேட்டி எடுத்த காலம் 2013-11-05
4. ஜம்இய்யத்துல் உலமா உறுப்பினர்கள் காலம் 2013-11-07
5. பைத்துஸ் ஸகாத், 2013-11-10
6. கோயில் தர்ம கருத்தாக்கள் 2013-11-12